கூட்ட எண் 13 நகராட்சி அலுவலகம்,
2020 - 2021 -ம் ஆண்டு ஆரணி,
நாள் 31.12.2020

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31.12.2020-ந்தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

1.ஆரணி நகராட்சியில் பணி புரியும் துப்புரவு பணிமேற்பார்வையாளர் அ.தனபால் என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு பணி மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ளார், அதனை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்:1687/2020/அ1)

2. ஆரணி நகராட்சியில் பணிபுரியும் பொது சுகாதார துறை பிரிவு பணியாளர்கள் பொறியல் பிரிவு பணியார்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கான சீருடை வாங்கி வழங்கவும் அதற்காக ஆகும் தோராய செலவு (தையக்கூலி) ஊட் பட்ட ரூ5,00,000 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்:3480/2014/அ1)

3. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான IUDP கடை எண்:-180, வரி விதிப்பு எண்.038//404, கடை எண்:-186 வரி விதிப்பு எண்033/411, மற்றும் வண்டி மேடு கடை எண்:-181, வரி விதிப்பு எண்.638/405 ஆகிய கடைகளை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளதால் மூன்று கடைகளையும் நவம்பர் 2020 முதல் கணினியில் வரி விதிப்பு நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்:1441/2020/அ3)

4. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை 28 அவர்களின் கடிதம் எண்:12635/2020/UPA3-/ நாள்:28/08/2020 யில் மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பிட்டு திட்டத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளை தேர்வு செய்ய நகராட்சி பகுதியில் களபணிகள் ஆய்வு தொகுப்பு செய்வதற்கும் மற்றும் கணினியில் பதிவேற்றம் செய்வதற்கும் கீழ்க்கண்ட தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| படிவம் சர்வே செய்தது | 6823X5= 34115 |
| படிவம் ONLINE ஏற்றியது | 6341X5= 31705 |
| | **65820** |

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்:1093/2020அ1)